15.07.2026

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் - II, திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 1805/2024**
**ம.சா. - 2**

2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 15 ம் நாள் 1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி உதவியாளர் திரு. எம். கனகலிங்கம் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரஹமத்துல்லா | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**முதல் விசாரணை (மனுதாரர் தரப்பில்) :**

நான் மனுதாரர்கள் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் அதை படித்து பார்த்து புரிந்து கொண்டு கையொப்பமிட்டுள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

1. ஆதார் கார்டு நகல் ம.சா.ஆ.5.

**கு.வி. (எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தை தவிர வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இறந்து போனவரும் நானும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை திருச்சி டூ தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். துவாக்குடி பேருந்து நிறுத்தம் எப்போதும் போக்குவரத்து நெரிசல் இருக்கும் என்றால் சரிதான். வாகனங்கள் மெதுவாக வரவேண்டும் என்று பேரிகார்டுகள்

15.07.2026

வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எல்லா வாகனங்களும் மெதுவாக நிறுத்தி தான் போக முடியும் என்றால் சரிதான்.

1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் அதிக வேகமாகவும் கவனமில்லாமலும் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்து போன நபர் தான் அதிக வேகமாக வாகனத்தை ஓட்டி பேரிகார்டு மீது மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றும் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உதவ வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அவரது கையொப்பம் பெறப்பட்டது.

சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.II,
திருச்சிராப்பள்ளி.